## வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனி - 2015

வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கிழக்கு தள அலுவலகத்தின் இருப்பு மீதி இரு தடவை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டதால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட விற்பனைக் கிரயம் ரூபா 2,224,434 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு (தலைமை அலுவலகம்) ரூபா 44,033,592 ஆகவிருந்தது. எனினும் பட்டியலில் இது ரூபா 45,514,877 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 1,481,285 வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 4:2:2 | சபைக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது 07 சபைக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றது. |
| (ii) பிரிவு 5:2 | 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பாதீடு கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) பிரிவு 7:4:2 | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு தலைவர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலரால் (சீஈஓ) தலைமை தாங்கப்பட வேண்டியிருந்ததுடன் சபைக் கூட்டத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் சந்திக்க வேண்டும். எனினும், சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 2015 ஆம் ஆண்டின் போது நடைபெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 சனவரி 25 இன் 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கையின் 4:2:1 ஆம் வழிகாட்டி | 2015 ஆம் ஆண்டிற்கான பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 132,874,402 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 106,271,865 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,602,537 அல்லது 20 சதவீதம் ஆன பின்னடைவைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 237,985,165 ஆல் நிர்வாகச் செலவினம் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவுக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

2015 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் தள அலுவலகங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பின்வரும் மூன்று தள அலுவலகங்கள் நட்டத்தில் இயங்கியிருந்தன.

| தள அலுவலகத்தின் பெயர் | ஆண்டிற்கான நட்டம் |
|---|---|
| | ரூபா |
| பொலன்னறுவை | 1,796,503 |
| ஊவா | 14,468,497 |
| தெற்கு | 2,046,790 |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,654,978 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தள அலுவலகமானது மீளாய்வாண்டு முழுவதும் வங்கி நடைமுறைக் கணக்கில் இருந்த கிட்டத்தட்ட ரூபா ஒரு மில்லியனான அதன் மிகைப் பணத்தை வருமானம் ஈட்டும் மூலங்களில் முதலிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

கம்பனியின் தந்திரோபாய பார்வையை நோக்கி கவனம் செலுத்துவதற்கான இடைத்தர காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை.

### 4.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வருடாந்த கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் கம்பனியானது மீளாய்வாண்டிற்கான அதனுடைய நிதிக்கூற்றுக்களை அண்ணளவாக 105 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் 2016 யூன் 14 இலேயே கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்திருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 சனவரி 18 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மீதான கட்டுப்பாடுகள் | கடன்பட்டோர்கள் மற்றும் பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு கம்பனியானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | நிதி முகாமைத்துவம் | வங்கி நடைமுறைக் கணக்கிலுள்ள சாதகமான மீதிகள் நீண்டகாலத்திற்கு விளைவற்றிருந்தது. |